**தலைப்பு 259 – மாத்தளை மாவட்ட செயலகம்**

-

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 259 - மாத்தளை மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுப் கொள்கைகளுக்குரிய தகவல் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாத்தளை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கையின் 1.6(அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியிருக்கவில்லை

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அறிக்கையின் 1.6(அ) பந்தியில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.6 நிதிக˙கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இறுதி மீதிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுகளில் ஆரம்ப மீதிகளுடன் ஒப்பிடும்போது ரூபா 181,046 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | இத்தவறுகள் இதன் பின்னர் மேற்கொளளாமல் இருப்பதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தபக்பட்டுள்ளதாக | கணக்கு மீதிகளை சீராக்குவதற்கு˙ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் (SA - 82) இன் கீழ் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் சொத்து வகையின் கீழ் காண்பிக்கப்பட்டு மூலதன சொத்துக்களை கையேற்பதற்காக ரூபா | ரத்தொட்ட பிரதேச செயலகத்தின் சொத்துக் கோவைகளை தயாரிக்கும் போது இடம் பெற்ற தவறு என்பதா. | கணக்கு மீதிகள் ஒப்பிடப்பட்டு சீராக்கப்பட் வேண்டும். |

1,792,665 ஆன செலவின மொன்று செலவிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட செலவினக் கூற்றின் பிரகாரம் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் இயந்திரக் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 1,964,341 ஆக இருந்ததால் ரூபா 176,676 ஆன வேறுபாடு காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஏற்பாடுகளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு** | **பெறுமதி**<br>**ரூபா** | **இணக்கமின்மை** | | |
| (அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 1646 | | மாவட்ட சமுர்த்தி பிரிவிற்குரிய 03 வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் 10 ஆண்டு காலமாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஓட்டக் குறிப்புககளை கணக்காய்விற்கு வழங்குவதற்கு அறிவித்துள்ளதாக | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும், |
| (ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | 2012 யூலை 24 ஆம் திகதிய HAF – 3-MISCL-08-08 ஆம் இலக்க கடிதத்தின் 1.7 ஆம் பந்தி | | ஒவ்வொரு கிராம சேவையாளர் அலுவலகமும் 03 மாதங்களுக்கு ஒரு முறை பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் மாத்தளை மாவட்டத்தில் 24 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் 12 அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகங்களும் அவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு முதல் வருடாந்த திட்டம் தயாரிக்கப்பட்டு பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கையின் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2021 ஆகஸ்ட் 13 ஆந் திகதிய 08/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி மற்றும் 2011 மார்ச் 31 ஆந் திகதிய HAF – 2/19/MGTCM/15/1907 ஆம் இலக்க கடிதத்தின் 02 ஆம் பந்தி | 170,300 | வெற்றிடங்கள் காணப்படும் அலுவலகங்களில் பதில் கடமை புரிவதற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பிரயாண செலவினம் மற்றும் இணைந்த படிகள் கொடுப்பனவு செய்ய முடியாத போதும் 05 பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தில் பதில் கடமை புரியும் 07 உத்தியோகத்தர்களுக்கு இணைந்த படிகள் மற்றும் பிரயாணச் செலவினம், கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தாபன விதிக்கோவையின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பிரயாண செலவினம் மற்றும் இணைந்த படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கையின் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 2021 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 20/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | அனைத்து மூலங்களிலிருந்த வருமானம் அரசின் வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும் தம்புள்ள பிரதேச செயலகத்தின் வளவில் நடாத்திச் செய்யப்படும் சிற்றுண்டிச்சாலையின் வாடகையாக மாதாந்தம் ரூபா 92,000 வீதம் நலன்புரி சங்கத்திற்கு கிடைத்திருந்த போதும் அதில் எந்தவொரு தொகையும் அரசின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருக்க வில்லை. | கட்டிடத்தை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந் து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக வும் அம்மதிப்பீடு கிடைத்த பின்னர் வாடகை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் ஆலோசனைகளி ன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2023 செப்தம்பர் 19 ஆந் திகதிய 2023/04 ஆம் இலக்க பாதுகாப்பு அமைச்சு சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி | 2024 ஆம் ஆண்டிற்காக மாவட்டத்தில் அனைத்து சுடுகலன்கள் அனுமதிப்பத்திரங்களை 2023 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென் அறிவிக்கப்பட்டிருந்த போதும் கலேவல, தம்புள்ள மற்றும் அம்பன்கங்க கோரள பிரதேச செயலக பிரிவுகளின் 60 நபர்கள் 2024 பெப்ரவரி மாதம் வரையிலும் சுடுகலன் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் தண்டப்பணத்தை அறவிடுவதாக | சுற்றறிக்கையின் ஆலோசனைகளி ன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.5 ஆம் பிரிவு மற்றும் 2021 சனவரி 21 ஆந் திகதிய பிற்சேர்க்கை 38 இன் மூலம் திருத்திய 9.3 ஆம் பந்தி | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் வில்கமுவ பிரதேச செயலகத்தின் கெப் வண்டியொன்று ரூபா 1,366,280 ஆன செலவினமொன்று மேற்கொண்டு திருத்த வேலைகள் செய்யப்பட்டிருந்தன | 05 இலட்சித்திற்கு குறைந்த தொகை செலவாகும் என கருதி என்ஜினை கலட்டி பரீட்சித்த போது மேலதிக திருத்தங்க்ள உருவாகியமை மற்றும் அதற்காக வேறாக விலைகோரலொன்று மேற்கொள்ள முடியாததாக | சுற்றறிக்கையின் ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரிந்தவெல சமூர்த்தி சமுதாய வங்கியின் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப் பட்டிருந்த ரூபா 4,590,500 ஆன நிதி மோசடி தொடர்பாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பரிசோதனை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புலனாய்வின் தற்போதய நிலைமை தொடர்பாக தகவல்களை வழங்குமாறு சமூர்த்தி பணிப்பாளர் நாயகத்திற்கும் விசேட புலனாய்வு பிரிவிற்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக இணக்கப்பாடு ஒன்று இல்லாமையால் அறவீடு ஒன்று மேற்கொள்ள முடியாமல் இருந்ததாக | பரிசோதனை நடவடிக்கைகளை விரைவசில் பூர்த்தி செய்து பொருத்தமான எதிர்வரும் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அடையாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வில்கமுவ பிரதேச செயலகத்தினால் ரூபா 462,327 ஆன செலவில் நிர்மானிக்கப்பட்டு நலனாலி ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த புகை பிடித்து காயவைக்கும் கருவாட்டு நிலையம் மற்றும் அசிரி அரைப்பதற்கு தேவையான பொயிலரொன்று தயாரிப்பதற்கு நபரொருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 350,000 ஆன உபகரணங்கள் 2024 சனவரி 18 ஆந் திகதி வரை விளைவற்று காணப்பட்டது. | புகை கருவாட்டு தொழிற்சாலையின் உற்பத்திக்காக எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பரிசோதனை நடவடிக்கைகளை விரைவில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பொருத்தமான எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் முன்னேற்றமடையாதிருந்த திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரந்தொட்ட பிரதேச செயலக பிரிவில் அனர்த்தங்களுக்கு உள்ளானவர்களை மீள் குடியேற்றுவதற்காக வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2018 – 2021 காலப்பகுதியில் ரூபா 5,400,000 ஆன மானியங்களை பெற்றுக்கொண்ட 06 நலனாலிகள் இறுதிவரை நிர்மான நடவடிக்கைகள் பூர்த்தி செய்து மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு செய்யப்பட்ட தவணைக்குரிய நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படும் வரை அடுத்த தவணையை விடுவிக்க முடியாதெனவும் நலனாலிகளுக்கு அவ்வப்போது ஆலோசனை வழங்கியுள்ளதாகவும். | நிதி ஏற்பாடுகளில் இருந்து எதிர்பார்த்த செயன்முன்னேற்றத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கைத்தொழில் அமைச்சிலிருந்து 2022 ஒக்தோபர் 27 ஆந் திகதி கிடைத்த ரூபா 15,904,651 தொகையை பயன்படுத்தி அம்புல்அம்பே கைத்தொழில் பேட்டையின் வேலி நிர்மாணத்தின் I ஆம் கட்ட வேலைகள் 2022 திசெம்பர் 29 ஆந் திககி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை வேலை பூர்த்தி செய்யப்படாமல் ரூபா 6,774,590 ஆன எஞ்சிய தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வேலி நிர்மாணத்தின் II ஆம் கட்டத்தில் 38.6 மீற்றர் நீளமான வேலி நிறைவேற்றப்படாமல் அதற்காக ரூபா 127,380 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வேலி நிர்மாணத்தின் தேவைப்பாடு சரியாக இனங்கண்டு மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்காமல் 02 ஆம் கட்டத்தின் கீழ் வேலி நிர்மாணம் காரணமாக முதலாவது கட்டத்தின் கீழ் வேலி நிர்மாணித்த காரணத்தினால் முதலாவது கட்டத்தின் கீழ் கைத்தொழில் பேட்டையின் உள்ளக | காணியின் எல்லை தொடர்பாக சிக்கல் உள்ளதால் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்துடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு வரவுள்ளதாக | முறையான மேற்பார்வையொன் றுடன் உரிய காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட நியமத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட வேலைக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரீதியாக 340 மீற்றர் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,700,000 தொகை சிக்கனமற்ற செலவினமொன்று இருந்தது. | | |
| (ஆ) | உக்குவெல பிரதேச செயலகத்தின் புதிய கட்டிட நிர்மாணம் (B பகுதி 6 ஆம் கட்டம்) செயற்திட்டத்தில் 19 வேலை விடயத்தில் ஆரம்பிக்கப்பட்டோ இருக்காதிருக்கையில் நிறைவேற்றப்படாத 04 வேலை விடயங்களுக்காக நிறைவேற்றியதாக பட்டியல் பரிந்துரைக்கப்பட்டு ரூபா 1,585,976 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் செயலாற்றல் பிணை 2024 சனவரி 15 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் 2023 திசெம்பர் 11 ஆந் திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியாக இருந்த போதும் 2024 பெப்ரவரி 05 ஆந் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யாமையால் ரூபா 814,165 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டத்தை செயற்படுத்தியதால் சில குறைபாடுகள் தொடர்பாக சிக்கல்கள் காணப்படுவதா | முறையான மேற்பார்வையொன்றுடன் உரிய காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட நியமத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட வேலைக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | உக்குவெல பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் “மேலதிக வேலைகள் பூர்த்தி செய்தல்” திட்டத்தின் 11 வேலை விடயங்களுக்காக ரூபா 1,504,218 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும். அவ்வேலை விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் பிணை 2024 ஜனவரி 31 ஆந் திகதி காலாவதியாகியிருந்ததுடன் 2023 சனவரி 28 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் 2024 பெப்ரவரி 05 ஆந் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் ரூபா 164,717ஆன தாமத கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இறுதி பட்டியல் கொடுப்பனவின் போது நிறுத்தி வைத்தல் தொகையை பிடித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதால் தவறுகள் இருந்ததால் அதன் மூலம் சரி செய்து கொள்ளலாம | முறையான மேற்பார்வையொன்றுடன் உரிய காலப்பகுதியில் மதிப்பிடப்பட்ட நியமத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட வேலைக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செளலகத்திலும் 02 பிரதேச செயலகங்களுக்கும் உரித்தான 09 வாகனங்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்று காணப்பட்டன. | குறித்த நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக | பயன்படுத்துவதற்கோ அல்லது கைதவரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 நட்டங்களும் சேதங்களும்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஜனவரி 20 ஆம் திகதிய 01/2022ஆம்இலக்கஓய்வூதியதிணைக்களசுற்றறிக்கை 02 ஆம்பந்தியின் IVபிரிவிற்குமுரணாகநடவடிக்கைஎடுத்துஅம்பன்கங்கோரளைமற்றும் கலேவலபிரதேசசெயலகபிரிவுகளில் வெளிநாடுசென்ற 03ஓய்வூதியம் பெறுகின்றவர்களுக்காகவாழ்க்கைச் செலவுகொடுப்பனவுரூபா 117,450 கூடுதலாககொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | மீண்டும் அறவிடுவதற்குஓய்வூதியத் திணைக்களத்திற்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கைஅறிவித்தல் பிரகாரம் நடவடிக்கைஎடுப்பதாக |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாத்தளை மாவட்டத்தில் 11 சமூர்த்தி சமுதாய வங்கிகளில் தெரிவுப் பரிசோதனையின் போது 2023 ஜூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறு 176 நல்னாலிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 19,347,350 ஆன கடன் அளவில் ரூபா 10,274,194 நிலுவை கடன் மீதி காணப்பட்டதுடன் அந்நலனாலிகளிடம் இருந்து 09 மாதங்கள் முதல் 15 மாதங்கள் வரையான காலப்பகுதியில் எவ்வித தவணையும் அறவிடப்பட்டு இருக்கவில்லை | கடன் அறவிடுவதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படாத சமூர்த்தி முகாமையாளர்களிடமிருந்து விடுவிப்புக்கு காரணங்கள் கோரப்பட்டுள்ளதாக | நிலுவை கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 மே 17 ஆம் திகதியமற்றும் DSD/HO/MF/2020/05ஆம் இலக்கமற்றும் 2021 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2021/02 ஆம் இலக்கசமூர்த்திபணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சமூர்த்திதிணைக்களத்தினால் மீளளிப்புஅடிப்படையில் சமுர்த்திசமுதாயவங்கியில் இருந்துகுறைந்தவருமானம் பெறும் குடும்பங்களுக்கு 2020 ஆம் ஆண்டின் போதுரூபா 357,309,399 கூட்டுத்தொகையானநலன்கள் கொடுப்பனவுசெய்யப்பட்டிருந்தபோதும் மீளாய்வாண்டின் இறுதிதிகதிவரையிலும் அத்தொகையைமீளளிப்பதற்குநடவடிக் கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை | மீளளிப்பிற்கு கோரப்பட்டுள்ளதாகவும் பணம் கிடைக்கவில்லை என்பதாக | சுற்றறிக்கையின் பிராரம் மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1950 இன் 09 ஆம் இலக்க காணி கையேற்றல் சட்டத்தின் 38 (அ) பிரிவின் உப கட்டளை பிறப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்ட திகதியின் கையேற்பதற்கு உரிய இழப்பீடு தொகையை செலுத்த வேண்டிய போதிலும் 03 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட இழப்பீட்டுத் தொகை கொடுப்பனவு தாமதமாக இருந்தமை காரணமாக 02 பிரதேச செய்த பிரிவுகளில் 06 நலனாலிகளுக்கு ரூபா 5,023,070 ஆன வட்டித் தொகையை கொடுப்பனவு செய்வதற்கு நேர்ந்தது. | கையேற்றல் செயற்பாட்டின் போது தவிர்க்க முடியாத தாமதங்கள் காரணமாக காலம் செல்வதற்கு நேர்ந்துள்ளதாக | இழப்பீட்டு கொடுப்பனவு தாமதத்தை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 05 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஓய்வு பெற்ற வேலை இடை நிறுத்தப்பட்ட சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்கள் என 08 பேரின் மொத்தம் ரூபா 853,836 ஆன நிலுவை மீதி மீளாய்வாண்டில் இறுதி வரையில் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆலோசணை வழங்கியுள்ளதாக | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (உ) | 2021 செப்டம்பர் மாதத்தின் போது ரத்தொட்ட பிரதேச செயலகத்தினால் கடமை தினங்களில் 05 பல் தொழில் அபிவிருத்தி உதவியாளர்கள் கடவத்த பிரதேசத்தில் தமது சொந்த வீட்டில் சேவையில் ஈடுபடுத்தியமை தொடர்பாக புலனாய்வு என்று மேற்கொள்வதற்குரிய தகவல்கள் 2021 ஒக்டோபர் 05 ஆம் திகதி உள்நாட்டு | அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது | பரிசோதனை நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்து பரிந்துரை பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டுமதாக |

அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை புலனாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன் அது தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை

## 4. நல்லாளுகை

**பொது மக்களுக்கு சேவை புரிதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 ஜனவரி 01 முதல் 2023 ஜூன் 30 வரையிலானகாலப்பகுதியில் சமூர்த்திஉதவித்தொகை,ஊனமுற்றோர் படிகள்,சிறுநீரகபடிகள் மற்றும் முதியோர் படிகள் ரூபா 735,014,912 ஆனஉதவித் தொகைகள் மாவட்டசெயலகத்தில் இருந்துசமுர்த்திசமுதாயவங்கிகளுக குஅனுப்பிவைக்கப்பட்டபோதும் அவற்றைபயனாளிகளுக்குஅனுப்புவதில 08 நாட்கள் முதல் 177 நாட்கள் வரையானகாலம் தாமதித்த 578 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இதன் பின்னர் இவ்வாறாதனசிக்கல்கள் ஏற்படாதவகையில் முறையானஉள்ளககட்டுப்பாடொன்றுடன் பராமரித்துச் செல்வதாக | கொடுப்பனவுதாமதம் தொடர்பாகபரிசோதைனகளைமேற்கொண்டுள திர்வரும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டியதுடன் தாமதத்தைதவிர்ப்பதற்குநடவடிக்கைஎடுத்தல் வேண்டும். |
| (ஆ) 04 பிரதேச செயலகங்களில் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற 22 வீடு மற்றும் ஆதனங்கள் சேதங்களுக்காக மேலும் செலுத்த வேண்டிய ரூபா 722,706 ஆன இழப்பீடு தொகையை 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தம்புள்ள பிரதேச செயலகம் கட்டுநிதி கிடைத்ததும் கொடுப்பனவு செய்வதாகவும் அம்பன்கங்க மற்றும் லக்கல பிரதேச செயலகங்களில் எஞ்சிய இழப்பீட்டுத் தொகையை கொடுப்பளவு செய்வதற்கு நிதி ஏற்பாடு கிடைக்கவில்லை என்பதாகவும் | குறித்த இழப்பீடு தொகையை உரிய காலப்பகுதியில் செலுத்த வேண்டும் |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2002 ஜுன் 19 ஆம் திகதிய 2002/01 ஆம் இலக்க ஒன்றிணைந்து சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரகாரம் ஒரே இடத்தில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவை புரிந்து உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு உட்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்தின் சமூர்த்தி பிரிவின் 33 பேர் 6 ஆண்டுகள் முதல் 23 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் தொடர்ச்சியாக ஒரே சேவை நிலையத்தில் சேவை புரிந்து வந்தனர். | இந்த உத்தியோகத்தர்களை மாவட்டத்தில் இடமாற்றம் செய்வதற்கு இயலுமை காணப்படாததுடன் அது சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தால் வேண்டும் |